# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ,
VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register — Case No.CC.30/**2018**
Sessions

Deposition of witness for — Prosecution PW 1 (LW 1)
Defence
Court

Name — தினகராஜன்

Father/Husband Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.07.2022**

**முதல் விசாரணை**

நான் வேப்பந்தகுடியில் வடக்குத் தெருவில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியிடம் நான் மரம் வெட்டும் தொழில் செய்வதற்காக ரூபாய் ஆராயிரம் கடனாக வாங்கியிருந்தேன். நான் வாங்கியிருந்த பணத்தில் ரூபாய் 5.000/- த்தை கடந்த 09.02.2017 அன்று ஆஜரி எதிரியிடம் நார்த்தாங்குடி பைபாஸ் ரோடு அருகே அவர் இருந்த போது கொடுக்க சென்றேன். நான் ஆஜர் எதிரியிடம் ரூ. 5,000/- பணத்தை கொடுத்த போது நான் வாங்கிய பணத்திலிருந்து ரூ.1000/- குறைத்து கொடுத்ததால் ஆஜர் எதிரி என்னை கொச்சை வார்த்தைகள் சொல்லி பேசினார். ஆஜர் எதிரி என்னை அடித்தார். எனது வலது கை கட்டை விரலை கடித்துவிட்டார். அக்கம் பக்கத்தில் சத்தம்கேட்டு வந்தவர்கள் 2 பேரையும் சமாதானம் செய்து வைத்தார்கள். எதிரி என்னை அடித்ததால் ஏற்பட்ட காயத்திற்கா என்னை சத்தியமூர்த்தி மற்றும் பழனி இருவரும் என்னை நீடாமங்கலம் அரசு மருத்துவமமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர்

மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். அங்கு வலங்கைமான் போலீசார் என்னை விசாரணை செய்தனர். போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (சாட்சியடம புகார் வாக்குமூலம் காண்பிக்கப்பட்டு அ.சா.ஆ 1ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE , VALANGAIMAN.

Calender
Miscellaneous
Preliminary Register Case No.CC.30/**2018**
Sessions

Deposition of witness for Prosecution PW 2 (LW 3)
Defence
Court

| | |
|---|---|
| Name | **செல்லையன்** |
| Father/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.07.2022**

**முதல் விசாரணை**

நான் வேப்பந்தகுடியில் வடக்குத் தெருவில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இன்றிலிருந்து சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நான் இரவு 7.00 மணியளவில் நான் வேலை முடித்து வந்துகொண்டிருந்தபோது நார்த்தாங்குடி பைபாஸ் ரோடு அருகே ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 க்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை நடந்தது. அப்போது பேசிக் கொண்டிருக்கும் போதே ஆஜர் எதிரி அ.சா.1ன் வலது கை கட்டை விரலை கடித்துவிட்டார். அ.சா.1ம் எதிரியை அடித்து விட்டார். காயம்பட்ட அ.சா.1 ஐ நீடாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ,
VALANGAIMAN.

| | | |
|---|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.30/**2018** | |
| Deposition of witness for | Prosecution PW 3<br>Defence<br>Court | (LW 4) |
| Name | கண்ணகி | |
| Father/Husband Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.07.2022**

**முதல் விசாரணை**

நான் வேப்பந்தகுடியில் வடக்குத் தெருவில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது கணவர் காட்டு கருவை மரம் வியாபாரம் செய்து வருகிறார். இன்றிலிருந்து சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ரூ.5,000 என்னிடம் கடன் கொடுக்க வேண்டும் என்று வாங்கி சென்றார். அன்றிரவே 8.00 மணியளவில் எனது மாமியார் எனக்கு போன் செய்து எனது கணவர் தஞ்வாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக சொன்னார். நான் உடனே தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் எனது கணவரிடம் கேட்ட போது ஆஜர் எதிரியிடம் வாங்கிய கடனை கொடுக்க சென்றபோது ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், அடித்ததாவும், என் கணவரின் வலது கை கட்டை விரலை கடித்துவிட்டதாகவும் சொன்னார். போலீஸ் என்னை விசாரித்தனர்.குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாணை இல்லை.